# நம்பகமான யாத்திரை:

## அன்பின் வழியில் முன்னேறுதல்

அன்பார்ந்த நண்பர்களே,

ஆன்மீக தேடல் கொண்ட அனைவரும் ஒரு பொதுவான குறிக்கோளை கொண்டுள்ளனர், அது சுய-தன்மைமாற்றமாகும். பல ஆன்மீக பாதைகளும் ஒரு குருவை சார்ந்திருப்பதை பரிந்துரைக்கின்றன, ஆனால் இன்னமும் நாம் வேறொருவரை சார்ந்தே இருப்பதால் தன்மைமாற்றம் என்பது இயலாததாக ஆகிறது. 'நான் செயலாற்ற வேண்டும்' என்று, நாம் சுயமாக பொறுப்பேற்கும்போது மட்டுமே தன்மைமாற்றம் சாத்தியமாகிறது. கடவுளை சார்ந்திருப்பதுகூட, 'பொறுப்பை மற்றவர்மீது சுமத்துவது' என்றாகிறது.

எனது குருவையோ அல்லது வேறு யாரையோ. எனது பரிணாம வளர்ச்சிக்கு அல்லது தன்மைமாற்றத்திற்கு பொறுப்பாளியாக நிறுத்திவைக்கும்போது, தன்மைமாற்றம் நிகழாது. இதற்கான காரணம் எளிமையானது. கடவுளும் குருவும் தேவையானவற்றை ஏற்கனவே செய்துவிட்டனர். இப்போது, ஒரு ஆர்வலர் என்ற முறையில், எனது இதயத்தில் விதைகள் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளவை என்ன என உணர்ந்து, அந்த விதைகளை அடையாளம் கண்டுகொண்டு, அவை துளிர்த்து தழைத்தோங்க அனுமதிக்க வேண்டியது என் வேலையாகும். ஒருவகையில் கர்மாவின் மூலமாக நமது விதியை நாம்தான் உருவாக்கிக்கொண்டோம் என்பது உண்மை என்ற போதிலும் - விதியை சார்ந்திருப்பது அதைவிட பயனற்றதாகும்.

நமது தன்மைமாற்றத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு, (குறிப்பாக இந்திய பாரம்பரியத்தில்) ஆன்மீகம் என்பது கர்மா, ஞானம் மற்றும் பக்தி யோகம் குறித்து பேசுகின்றது – அதாவது செயலாற்றுவது, அறிந்துகொள்வது மற்றும் பக்தி செலுத்துவது. 'ஹார்ட்ஃபுல்னெஸ்' வழியானது,

உண்மையில் அந்த மூன்றின் ஒரு அழகிய சங்கமமாகும். இப்படிப்பட்ட பாதையில் பயணிக்கும்போதுகூட, வழியில் பல இடர்குழிகள் இருப்பதை கவனிக்கிறோம், ஏனெனில் கர்மா மற்றும் ஞானம் சார்ந்த அணுகுமுறைகளுக்கு அதிகப்படியான முக்கியத்துவத்தை நாம் சேர்த்துக்கொள்கின்றோம். அவை மிகைப்படுத்தப்படும்போது, பாதையின் சூட்சும தன்மைக்கு மாறாக திகழ்கின்றன.

ஆன்மீக உயர்மட்டங்களில் இருந்து வீழ்ச்சியுற்று *பிரம்ம-ராட்சஸர்*களாக ஆன பிராமணர்கள் குறித்து நீங்கள் கேள்விபட்டிருக்கக் கூடும், மேலும் மிக உயர்ந்த மட்டங்களில் இருந்து வீழ்ச்சியுறும் யோகிகள், *யோக-பிரஷ்ட்ட* ஆகின்றனர். அவர்களது யோக யாத்திரை எண்ணற்ற காரணங்களால் முழுமைபெறாமல் இருக்கின்றது. *ஞானிகளும், கர்ம யோகிகளும்* வீழ்ச்சியுறக் கூடும், ஆனால் ஒரு பக்தன் வீழ்ச்சியுற்றதாக நீங்கள் கேள்விபட்டதுண்டா? ஒரு பக்தன், இறைவனின் கவனிப்பில் இருப்பதனால், *பக்தி-பிரஷ்ட்ட* என்ற பதம்கூட இருந்திட வாய்ப்பில்லை. சரணாகதி அடைந்த எவரையும், அதாவது தவிர்க்க இயலாத வியப்போடு உண்மையாக சரணடைந்தவரை இறைவன் பாதுகாப்பார். நாம் *கர்தா* (செய்பவர்) என மாறும்போது மட்டுமே பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன. எந்த ஒரு பக்தரும் ஆன்மீக வீழ்ச்சியை இதுவரை அனுபவித்தது கிடையாது; அது ஒருபோதும் நிகழ முடியாது. அவ்வாறு நிகழ்வதாக தோன்றினால், உண்மையான பக்தி அல்லது சரணாகதி இன்மையையே அது குறிக்கிறது.



*சரணாகதி அடைந்த எவரையும், அதாவது தவிர்க்க இயலாத வியப்போடு உண்மையாக சரணடைந்தவரை இறைவன் பாதுகாப்பார். நாம் கர்தா (செய்பவர்) என மாறும்போது மட்டுமே பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன. எந்த ஒரு பக்தரும் ஆன்மீக வீழ்ச்சியை இதுவரை அனுபவித்தது கிடையாது; அது ஒருபோதும் நிகழ முடியாது.*

முதன்முதலில் நான் சகஜ மார்க்கத்திற்கு அறிமுகமானபோது, எனது பிரிசெப்டர், சகோதரி திரௌபதி, "நீங்கள் ஏன் தியானம் செய்ய வேண்டும் என விரும்புகிறீர்கள்?" என அடிப்படையான ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார்.
"நான் கடவுளை தேடிக்கொண்டிருக்கிறேன்" என பதிலளித்தேன்.

இன்று, எனது சொந்த நம்பிக்கைகள் சிலவற்றைப் பற்றி, நான் ஆழ்ந்து சிந்திக்கும்போது, விஷயங்களை வேறுபட்ட விதத்தில் புரிந்துகொள்கிறேன்,

*முதன்முதலில் நாம் அவரிடம் இருந்து எவ்வாறு பிரிந்தோம், அதன் பொருட்டே அவரை தேடுவதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது? இழந்த தொடர்பை புதுப்பித்துக் கொள்ள, பிரிவை ஏற்படுத்திய காரணிகளை நாம் கண்டறிந்து, அவற்றை நீக்க வேண்டும். நம்பகமான யாத்திரையின் துவக்கம் அதுவே.*



முன்னர் எவ்வளவு தவறான புரிதலுடன் இருந்தேன் என்பதை உணர்கிறேன். நம்மில் பலரும் கடவுளை தேடிக்கொண்டிருப்பதாக கூறுவது, நகைப்பிற்குரியதாக இப்போது என் காதுகளில் ஒலிக்கின்றது. சிறிய விஷயங்கள் கண்களுக்கு புலப்படாமல் போகலாம், ஆனால் அனைத்தையும் சூழ்ந்துள்ள ஒரு ஜீவனை எவ்வாறு நாம் கவனிக்காமல் தவறவிடக் கூடும்? அதேநேரத்தில், எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் ஒன்றை நாம் காண்பதில்லை, ஒரு மீன் அதன் வாழ்நாள் முழுவதும் இருக்கின்ற சமுத்திரத்தை பற்றி ஏதும் அறியாதிருப்பதை போன்றது இது. இதற்கு மாறாக, கடவுளை பரிமாணங்களுக்கு உட்பட்ட அனந்தம் என நாம் கற்பனை செய்துகொண்டு குழப்பமடைகிறோம். ஏனெனில் நெடுந்தொலைவில் உள்ள ஜீவிதத்தின் இரு எல்லைகளையும் நாம் ஒருபோதும் கண்டதும் இல்லை, அறிந்துகொள்ளவும் முடியாது. தெய்வீகம், அதன் எல்லையற்ற நிலைகளில் அதைவிட அதிகப்படியாக, கண்களுக்கு புலப்படாத தன்மையை ஏற்கிறது.

நான் அவரை தேட தொடங்கினாலும், அவரது தரப்பிலிருந்து ஏதாவது ஒரு மட்டத்தில் தேடுதல் இல்லாமல், வரம்பிற்கு உட்பட்ட எனது உணர்ந்தறியும் திறனை கொண்டு, அனந்தத்தை நான் எவ்வாறு உணர்ந்தறிவது? அனந்தம் என்பது கிரகித்தலுக்கு அப்பாற்பட்டது – அது மிகச் சிறியதைவிட சிறியதா, மிகப் பெரியதைவிட பெரியதா என்பதை எவ்வாறு அளந்தறிவது? இதைவிட மற்றுமொரு சிரமம் எழுகிறது, ஏனெனில் கடினத்தன்மையால் ஒருபோதும் சூட்சுமத்தின் மதிப்பை அறிய இயலாது.

எனவே, பெருமதிப்பும் பிரம்மிப்பும் கொண்டு சரணாகதி அடைவதே ஒரே வழி:

> वो दिल कहां से लाऊं, जो तुझे पहचाने!
>
> அவரை அடையாளம் காணக்கூடிய வகையில் இதயத்தை எவ்வாறு தயார் செய்வது?

இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு, நாம் தீர்வு காணவேண்டிய ஒரு அடிப்படையான புதிர் உள்ளது. முதன்முதலில் நாம் அவரிடம் இருந்து எவ்வாறு பிரிந்தோம், அதன் பொருட்டே அவரை தேடுவதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது? இழந்த தொடர்பை புதுப்பித்துக் கொள்ள, பிரிவை ஏற்படுத்திய காரணிகளை நாம் கண்டறிந்து, அவற்றை நீக்க வேண்டும். நம்பகமான யாத்திரையின் துவக்கம் அதுவே.

தவழ்ந்தாடும் அலைகளை ரசித்தபடி கடற்கரையில் நீங்கள் இருப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் சமுத்திரத்தின் ஆழத்தில் உள்ள நீரை உங்களால் காண இயலாது, ஏனெனில் மேற்பரப்பின் அலைகளை மட்டுமே நீங்கள் காண முடிகின்றது. அலைகளும், “சமுத்திரம் எங்கே?” என கேட்ட வண்ணம் உள்ளன. அவற்றின் தேடலில் அவையும் அமைதியின்றி இருக்கின்றன. அவை நிதானமடைந்து, முடிவடையும் அத்தருணமே, மேற்பரப்பின் அலைகள் சமுத்திரத்துடன் ஒன்றாகி, அங்கு தெளிவும் ஏற்படுகிறது.

அலைகள், அதன் பிறப்பிடம் சமுத்திரமே என்பதை மறந்துவிட்டன – அவை அங்கிருந்து தோன்றி, பின் அங்கேயே ஐக்கியம் அடைகின்றன. அலைகளும் சமுத்திரமும் ஒன்றாக ஆவதற்கு, அவை நிதானித்து, முடிவடைந்து, சலனமற்றதாக ஆகவேண்டும். மரணமே உச்சக்கட்ட முடிவடைதலாகும். எனவே, மரணத்தின் பண்புகளை உட்கிரகித்து, அவற்றை பாவனை செய்ய முடிந்தால், இறந்தவர்போல் வாழ்வது என்றாகும்போது, நமது இதயங்களில் ஏற்புத்தன்மை தானாக பிறக்கும். அப்போது, மூல சமுத்திரத்துடன் ஒன்றாகும் சுப தருணம் துவங்கக்கூடும், அது மூலமுதல் சமாதி நிலையுடன் ஒத்திருக்கும் நிலையாகும். பௌதீக மரணம் பிரச்சினைக்கு தீர்வாகாது. உண்மையில், பிரச்சினை நமது சூட்சும சரீரங்களால் மூடப்பட்டு நீடித்திருக்கும். அதோடு பிறப்பு இறப்பு எனும் சுழற்சி எல்லையற்ற விதத்தில் தொடரும்.



*மரணத்தின் பண்புகளை உட்கிரகித்து, அவற்றை பாவனை செய்ய முடிந்தால், இறந்தவர்போல் வாழ்வது என்றாகும்போது, நமது இதயங்களில் ஏற்புத்தன்மை தானாக பிறக்கும். அப்போது, மூல சமுத்திரத்துடன் ஒன்றாகும் சுப தருணம் துவங்கக்கூடும், அது மூலமுதல் சமாதி நிலையுடன் ஒத்திருக்கும் நிலையாகும்.*

அன்பிற்குரியவர்மீது கொண்ட அன்பால், தன்னை மூழ்கடித்துக்கொண்டு முடிவுறுவதே, பக்தி எனப்படும். தெளிவாக கூறுவதெனில், நம்மையே நாம் கடந்துசெல்லும்போது தீர்வு காணப்படுகிறது.

जब मैं था तब हरि नहीं, अब हरि है मैं नाही ।
सब अँधियारा मिट गया, दीपक देखा माही ।।

‘நான்’ இருந்தபோது அவர் இல்லை,
இப்போது அவர் ‘இருக்கையில்’ ‘நான்’ இல்லை.
உள்முகமாக ஒளியைக் [வெளிச்சம்] கண்டபோது,
எல்லா இருளும் [மாயைகள்] மறைந்தன.

‘நான்’ எனும் மாயையே இருளாக இருந்துகொண்டு, நாம் இறைவனை தரிசிப்பதை தடுக்கிறது. இதயத்தில் அவர் இருக்கும்போது, அங்கு ஒளி மட்டுமே உள்ளது, இருள் எனும் நமது பிரசன்னம் காணாமல் போகின்றது.


*பக்தி, அன்பிற்குரியவர் மீதான தீவிர அன்பு, உணர்ச்சிகளின் ஏற்ற இறக்க அலைகளை சீரமைத்து, இருத்தல், மாற்றமடைதல் என்பதை தெய்வீகத்தின் ஒருமைத்தன்மை என ஒரே சீராக மாற்றுகிறது. அதற்கு மாறாக, அன்பிற்குரியவர் பற்றிய விழிப்புணர்விலிருந்து விலகிச்செல்வதே வலியையும் வேதனையையும் கொண்டுவருகிறது.*



விழிப்புணர்வின் இறுதி எல்லையில் முழுமையான தெய்வீகமயம் உள்ளது. உணர்வுறுநிலையின் மகா சமுத்திரத்தில், விழிப்புணர்வின் உயரத்தையும் ஆழத்தையும் கண்டறிய வேண்டும். இந்த அளவு நாம் புரிந்துகொண்டால், அன்பிற்குரிய பாபூஜி அவர்களின் ஊடுருவும் கேள்வியின் அர்த்தத்தை உணர்வோம். “இந்த உணர்வுறுநிலைக்கு உறுதுணைபுரிவது எது?” நாம் அன்பையும் மேன்மையானதையும் நிராகரிக்கும்போது மட்டுமே, நமது சொந்த ஜீவிதத்தின் உச்சத்தையும் ஆழத்தையும் பற்றிய தொலைநோக்கை நாம் தவறவிடுகிறோம். இது குறுகிய அளவே விழிப்புணர்வு கொண்டவர்களாக நம்மை விட்டுவிடுகிறது.

உள்முக திசைக்காட்டியை இழந்துவிட்ட அல்லது உள்முக திசைக்காட்டியானது தெய்வீகத்திற்கு முற்றிலும் எதிரான திசையில்

குவிக்கப்பட்டுள்ள ஒருவரைவிட ஏழ்மையானவர், (துச்சம், மிகுந்த துயரமும் தனிமையும் படைத்தவர், முக்கியத்துவமற்றவர்) என எவரும் இல்லை. பக்தி, அன்பிற்குரியவர் மீதான தீவிர அன்பு, உணர்ச்சிகளின் ஏற்ற இறக்க அலைகளை சீரமைத்து, இருத்தல், மாற்றமடைதல் என்பதை தெய்வீகத்தின் ஒருமைத்தன்மை என ஒரே சீராக மாற்றுகிறது. அதற்கு மாறாக, அன்பிற்குரியவர் பற்றிய விழிப்புணர்விலிருந்து விலகிச்செல்வதே வலியையும் வேதனையையும் கொண்டுவருகிறது.




சுதந்திரத்தை நோக்கிப் பீடுநடை

யூத பாரம்பரியத்தில், வழிபடுதலுக்குரிய ஒன்றிலிருந்து விலகிச்செல்வது என்பதை பாவம் என்பதற்கான விளக்கமாக, மிகக்குறிப்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாபூஜி கூறியபடி, நன்றியுணர்வற்று இருப்பதே பாவமாகும். துல்லியமாக கூறுவதெனில், நாம் நன்றியற்றவர்களாக ஆகும்போது உண்மையான உறவுமுறையில் விலகலை ஏற்படுத்தும் பல்வேறு கிளைகள் உதிக்கின்றன. நன்றியுணர்வற்று இருப்பது விலகிச் செல்வதின் தொடக்கமாகும்; ஆகையால், அது பாவச்செயலாகும். அன்பு இப்போது இல்லாமல் போகின்றது, எனவே உறவுமுறை முடிவடைகின்றது. உறவுமுறையை முடித்துவிட்டு நீங்கள் எங்கே செல்லப்போகிறீர்கள்? ஒரு அலையிடம், “அன்பான வலிமைமிக்க அலையே, இந்த சமுத்திரத்தைவிட்டு நீ எங்கு செல்வாய்?” என கேட்பதாக எண்ணிப்பாருங்கள்.

இந்த கண்ணோட்டத்தில், நமது விழிப்புணர்வை உலகாயத உடைமைகளுடன் நாம் அடையாளப்படுத்திக் கொள்ளும் எந்த விலகலாயினும், உடல், மனம், புத்திகூர்மை மற்றும் அகங்காரம் அனைத்தும், மையத்திலிருந்து, வாழ்வின் மூல ஆதாரத்திலிருந்து, *ஆத்மன்* என்பதிலிருந்து விலகிச்செல்வதுதான். இது மாயை மற்றும் அகங்காரத்துடன் இருத்தல் என அடையாளம் கண்டறியும் விதமாக, பாபூஜி எளிமையாக்கியுள்ள அழகை நாம் காண்கிறோம்.

*மாயத் தோற்றம், அறியாமை, இருள் மற்றும் விழிப்புணர்வற்ற நிலை ஆகியவற்றின் நிழலின்கீழ் வாழும் வாழ்க்கை, நரகத்தில் வாழ்வதைப் போன்றதாகும். அதேநேரத்தில், தெளிவு, கபடமற்ற தன்மை மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலை, இவற்றுடன் வாழும் வாழ்க்கை, சொர்க்க வாழ்க்கையாகும். இதுவே பக்தியின் அழகும், அதன் வழித்தடத்தில் அது தூண்டிவிடுபவைகளும் ஆகும்.*

அதை 23 சக்கரங்கள் கொண்ட *சாங்க்கிய* வடிவிலான வரைப்படமாக உருவகப்படுத்தி காட்டியுள்ளார். அந்த வரைப்படத்தில், மாயையின் வட்டங்கள் 5 மட்டுமே, அகங்காரத்திற்கு 11 வட்டங்கள். அதன் அர்த்தம், அகங்காரம்தான் நம்மை மையத்திலிருந்து விலக்கி, சுற்றெல்லையை நோக்கி இட்டுச்செல்கிறது. மாயையைவிட அகங்காரமே அதிக வீரியம் கொண்டு பாதையை தடுக்கின்றது. இது ஒருவகையான மாயத் தோற்றமாகும்.

பதஞ்சலி முனிவர் இதனை *பிராந்த்தி தர்ஷன்* என்றழைக்கிறார், கருத்தை தவறாக புரிந்துகொள்வது என்று இதற்கு பொருள். உலகாயத பொருட்களை சேகரித்துக் கொள்வதற்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால், வெளிப்புற வளமை மற்றும் உடைமைகளுடன் நம்மை அடையாளப்படுத்தி கொள்வது உள்முக *தரித்ரத* (தரித்திரம், துர்ப்பாக்கிய ஏழ்மைநிலை) என்பதின் பிரதிபலிப்பாகும். அத்தகைய செல்வம், மாயத் தோற்றம் அல்லது பாதுகாப்பின்மை என பொருள்படும் *பிராந்த்தி* என்பதை உருவாக்குகின்றது. இந்த அடையாளங்களால் ஏற்பட்ட பொய்மையின் கீழ், வாழ்க்கை கடந்து செல்கின்றது. நம்மில் மிகச் சிறந்தவர்கூட, இந்த உண்மையை உணர்ந்தறிய முடியாது.



*பக்தி என்பதற்கு விழிப்புணர்வின் ஒளியோடு, வாழ்க்கையில் அனைத்து எதிர்மறைகளையும் எதிர்கொள்ளும் முழுமையான அறிதலுடன், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன் வாழ்க்கையை நடத்திச் செல்வது எனவும் பொருள்படும். தியானம் என்பது மனம் சார்ந்த செயல்பாடு மட்டும் அல்ல, மனதையும் உடலையும் கடந்த ஒரு விஷயமாகும். பலர் அவர்களது தியானம், பல்வேறு கவனச் சிறதல்களால் அடிக்கடி தடம் புரள்வதாக புகார் செய்கின்றனர், ஆனால் பக்தியுடன் செய்யப்படும் தியானம், 'புலப்படாத ஒன்றை' மிக துல்லியமாக உணர்ந்தறிய செய்கிறது, ஏனெனில், அறிவாற்றல் மற்றும் மன கிளர்ச்சியை எழுப்பும் எந்தவொரு தூண்டுதல்களில் இருந்தும் மனம் விடுபட்டுள்ளது.*

மாயத் தோற்றம், அறியாமை, இருள் மற்றும் விழிப்புணர்வற்ற நிலை ஆகியவற்றின் நிழலின்கீழ் வாழும் வாழ்க்கை, நரகத்தில் வாழ்வதைப் போன்றதாகும். அதேநேரத்தில், தெளிவு, கபடமற்ற தன்மை மற்றும் மகிழ்ச்சி நிறைந்த நிலை, இவற்றுடன் வாழும் வாழ்க்கை, சொர்க்க வாழ்க்கையாகும். இதுவே பக்தியின் அழகும், அதன் வழித்தடத்தில் அது தூண்டிவிடுபவைகளும் ஆகும். இருள்நிறைந்த வாழ்க்கைமுறையை வாழ்வதில், நாம் உண்மையில் சலிப்படையும் நாளில்,

“இனிமேல், உள்முகத் தன்மைக்கு உதவிபுரிகின்ற ஒரு வாழ்க்கை முறையையே நான் ஏற்றுக்கொள்ளப்போகிறேன்” என மிகுந்த விரக்தியுடன் தெரிவிப்போம்.

சமுத்திரத்தின் மேற்பரப்பில் அலைகள் முடிவிற்கு வருவதற்கான தொடக்கம் அதுவே. அனைத்து வகையான கோரிக்கைகளையும் பூர்த்திசெய்வதற்கான அன்றாட முயற்சிகளால் எழும் சச்சரவுகள் ஒருவகை *தபஸ்* அல்லது தவமாக மாறக்கூடும். அது தவமாக மாறும்போது, நிச்சயமாக நமது கடமைகளை நிறைவேற்றுவது என்பதிலிருந்து அன்பிற்குரியவரின் பொருட்டு நமது கடமைகளை அன்புடன் நிறைவேற்றுவதை நோக்கி முன்னேறும். பின்னர் அதே பயணப்பாதை கறைபடியாத பக்தியாக முதிர்ச்சி பெறக்கூடும்.

பக்தி என்பதற்கு விழிப்புணர்வின் ஒளியோடு, வாழ்க்கையில் அனைத்து எதிர்மறைகளையும் எதிர்கொள்ளும் முழுமையான அறிதலுடன், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன் வாழ்க்கையை நடத்திச் செல்வது எனவும் பொருள்படும். தியானம் என்பது மனம் சார்ந்த செயல்பாடு மட்டும் அல்ல, மனதையும் உடலையும் கடந்த ஒரு விஷயமாகும். பலர் அவர்களது தியானம், பல்வேறு கவனச் சிறதல்களால் அடிக்கடி தடம் புரள்வதாக புகார் செய்கின்றனர், ஆனால் பக்தியுடன் செய்யப்படும் தியானம், ‘புலப்படாத ஒன்றை’ மிக துல்லியமாக உணர்ந்தறிய செய்கிறது, ஏனெனில், அறிவாற்றல் மற்றும் மன கிளர்ச்சியை எழுப்பும் எந்தவொரு தூண்டுதல்களில் இருந்தும் மனம் விடுபட்டுள்ளது. கவனச் சிதறல்கள் என்பது பல வகையான மனம் சார்ந்த விலகல்களின் இறுதி விளைவாகும். இந்த மனம் சார்ந்த விலகல்கள் நமது சுய வரையறைகளின் விளைவாகும், இவற்றை சம்ஸ்காரங்கள் என்கிறோம்.

சம்ஸ்காரங்களை மெல்ல மெல்ல விடுவித்துக்கொண்டு, மனதை பயிற்றுவிப்பது, பல சந்தர்ப்பங்களில் தாமதமாக நடைபெறும் செயற்பாடாகும். சம்ஸ்காரங்கள் உள்முக விரிவடைதலுக்கு மெல்ல வழிவிடும்போது உள்முக சூழலோடு நம்மை அனுசரித்துக் கொள்வதற்கு,

*பக்தியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒருவர், இறைவன்மீது முழு பற்றுறுதி கொண்டு, தனது நம்பிக்கையை இறைவன்மீது வைப்பார். இத்தகைய இடம்பெயர்ப்பு உன்னதமானதாகவும் உயர்வடையச் செய்வதாகவும் இருக்கும். பக்தனின் நம்பிக்கையில் ஒருபோதும் பின்னடைவு இருக்காது, எப்போதும் முன்னேற்றம்தான்.*

அதிப்படியான நேரத்தை எடுத்துக்கொள்கிறோம். அதன் பிறகே நாம் வலியை பொறுத்துக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளவதற்கும் நமக்கு வரம்புகள் உள்ளன என்பதை உணர்கிறோம்.

நமது பயிற்சிமுறையையும் மற்றும் அந்த பயிற்சிமுறையை அளித்தவரையும் குறித்து, உற்சாகம்நிறைந்த அல்லது துக்கம்நிறைந்த நிலைக்கு நாம் வருவதில், இயல்பாகவே சிக்கல்களும் சேர்க்கப்படுகின்றன. நமது விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கும் வரை, நாம் அதிக பற்றுறுதியை வளர்த்துகொள்கிறோம். ஏதாவது ஒரு விருப்பம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காத்திருப்பு பட்டியலில் இடம்பெற்றிருக்க நேரும் அத்தருணம், நிறுவனத்தில் அல்லது பயிற்சிமுறையில் அல்லது குருவிடத்தில் அவநம்பிக்கை கொள்ள தொடங்குகிறோம். இதை ஒவ்வொரு நாளும் நான் பார்க்கிறேன். உதாரணமாக, சாதகர் ஒருவர், “தாஜி, எனது உள்நிலை மிக நன்றாக இருக்கிறது. என் மகளுக்கு உங்கள் ஆசியுடன் தற்போது திருமணம் நிகழ்ந்துவிட்டது, இனி நான் செய்யவேண்டியது

*நமது எல்லா பயிற்சிகளும், இதயத்தை மரியாதைக்கு உரியதாக, அர்ப்பணிப்பு கொண்டதாக, சரணாகதி அடைந்ததாக தயார் செய்வதற்காகவே உள்ளது. வெற்றிடம் கொண்ட இதயத்தின் இந்த தயார் நிலையே, ஆதிபரம்பொருளை கவர்ந்திழுக்கின்றது. இறுதிகட்டம், உச்சக்கட்டநிலை என்பது தெய்வீகத்தின் இரக்கத்தாலும் கருணையாலும்தான் நிகழ்கிறது, நாம் தயாராகவும் ஆயத்தமாகவும் இருப்பதால் அல்ல.*

எதுவுமில்லை. எனக்கு எந்த கவலைகளும் இல்லாததால், வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு சேவை செய்ய முடிவு செய்துள்ளேன்” என எழுதியிருந்தார். சில வாரங்களுக்குபின், அதே நபர் புகார்தெரிவித்து, பாரபட்சமாக நடந்துகொள்வதாக என்மீது குற்றம் சாட்டினார்! இதை தெளிவுபடுத்திக்கொள்வதற்கான காரணங்களை நான் விசாரித்தபோது, அவர், “நீங்கள் என் மனைவிக்கு உடல்நலமற்று இருந்தபோது உதவவில்லை. தற்போது அவள் இல்லை. என் முழு இதயத்தையும்கொண்டு உங்களை பிரார்த்தித்தேன், ஆனால் என்ன நடந்தது பாருங்கள். இப்போது நம்பிக்கை இழந்துவிட்டேன், எனவே தியானம் செய்ய முடியவில்லை.

இங்கு பாபூஜி இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர் நிச்சயம் என் மனைவியை குணப்படுத்தி இருப்பார்" என அப்பட்டமாக கூறினார்.

அன்றாடம் இப்படிப்பட்ட தாக்குதல்களை சாட்சியாக பார்வையிடுவதால், நாரத பக்தி சூத்திரத்தின் (54வது ஸ்லோகம்) விவேகத்தை நாம் உண்மையாக பாராட்ட முடிகின்றது:

> गुण-रहितं कामना-रहितं प्रतिक्षण-वर्धमानं,
> अविच्छिन्नं सूक्ष्मतरं अनुभव-रूपम् ।
> (नारदभक्तिसूत्राणि ५४)
>
> பௌதீகம் சார்ந்த பண்புகளும், புலன் சார்ந்த விருப்பங்களும் இல்லாமல் இருப்பதே பக்தி. அது என்றென்றும் அதிகரித்து, மிக சூட்சுமமானதாகி, அனுபவித்து உணரக்கூடியதாகிறது.

உண்மையான பக்தி, வெகுமதி இல்லாததாலும் அல்லது கூடுதல் வெகுமதி கிடைக்காததாலும் தடுமாற்றம் அடையாது. எல்லா சந்தர்ப்பங்களிலும் அது அதிகரித்துக்கொண்டே இருக்கும். உங்கள் வாழ்க்கை துணையுடனும் குழந்தைகளுடனும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதை அது தடுக்காது. அத்தகைய ஒரு பக்தரை விபரீதம் தாக்கும்போது, அவர் அதை கருணையுடனும் நன்றியுணர்வுடனும் ஏற்றுக்கொள்வார். பக்தி ஒருபோதும் நிபந்தனைகளுடன் இருக்காது. அது, மனம் மற்றும் இதயம், தர்க்கம் மற்றும் உணர்வுகள் - இரண்டையும் கடந்த ஒன்று. தூய்மையான உணர்வுநிலையை அடைவதற்கு - வாழ்க்கைக்கு மதிப்பூட்டுவதில் அதிமுக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரே காரணி, பக்தியாகும்.

ஒரு பக்தனின் முன்னுரிமை அன்பாகும். அன்பு என்றால் கொடுப்பது என பொருள்படும். இரக்கம் என்பதும் கொடுப்பதேயாகும். அதற்கு மாறாக, பேராா்வம் என்பது பறித்துக்கொள்வதும், மற்றவர்களை பயன்படுத்திக்கொள்வதுமாகும். இரக்கம் கொண்ட இதயம் காத்திருக்கத் தெரிந்தது, ஆனால் பேராா்வம் கொண்ட மனிதருக்கு இந்த காத்திருத்தலை பொறுக்க முடியாது. எனவே, நித்தியமான ஒரு விஷயத்தைப் பற்றிய ஒரு தெளிவான முடிவிற்கு நாம் வரமுடியும். அது கலி யுகமாக இருப்பினும் அல்லது சத்திய யுகமாக இருப்பினும் – மிதமிஞ்சிய பேராா்வம் கொண்டிருக்கும் ஒருவருக்கு தன்மீதே நம்பிக்கை இருக்காது. அன்பு மெல்ல மெல்ல அதிகரித்து வரும் ஒருவருக்கு, நம்பிக்கை கொள்வதில் உறுதி இருக்காது. சிலநேரம் தன்மீது நம்பிக்கையும், சிலநேரம் பிறர்மீது நம்பிக்கையும் கொள்வார். (இதற்கு சிலநேரம் தன்னை நம்பாமலும், சிலநேரம் பிறரை நம்பாமலும் இருப்பது எனவும் பொருள்படும்.) பக்தியால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒருவர், இறைவன் மீது முழு பற்றுறுதி கொண்டு,

தனது நம்பிக்கையை இறைவன்மீது வைப்பார். இத்தகைய இடம்பெயர்ப்பு உன்னதமானதாகவும் உயர்வடையச் செய்வதாகவும் இருக்கும். பக்தனின் நம்பிக்கையில் ஒருபோதும் பின்னடைவு இருக்காது, எப்போதும் முன்னேற்றம்தான்.

ஒருமுறை, பாபூஜி எளிமையான அருட்செய்தி ஒன்றை 1981ம் ஆண்டு அகமதாபாத் நகரில் தெரிவித்தார். அவர் குஷால்பாய் படேல் அவர்களுடன் தென் ஆப்ரிக்கா செல்லும்போது எங்களுடன் இரண்டு இரவுகள் மட்டுமே தங்கினார். அந்த எளிமையான அருட்செய்தி இன்னமும் என் செவிகளில் ஒலிக்கின்றது.

> राहें तलब में ऐसे बेख़बर हो गए,
> मंज़िल पे आके मंज़िल को ढूंढते हैं।
>
> தங்களது தேடலில் அவர்கள் தடுமாற்றம் கொண்டிருந்திருந்ததால்,
> இலக்கை வந்தடைந்த பின்பும், அதை தேடிக்கொண்டிருந்தார்கள்!

அந்த வார்த்தைகளை கேட்டு நான் அதிக மகிழ்ச்சியுற்று பரவசம் அடைந்தேன். நாம் இலக்கை அடைந்துவிட்டதாக அது உறுதியளிக்கின்றது! ஒரு பக்தனுக்கு உண்மையில் பாதையே இலக்காக ஆகக்கூடும், இது நிச்சயமாக அவரது அருள் மற்றும் கருணையின் விளைவாகும். இல்லையெனில், நமது தரப்பிலிருந்து நாம் எதையும் செய்திருக்கவே முடியாது.

கடவுள் மற்றும் குருவை பற்றி என்ன சொல்வது? கடவுள் எதையாவது வேண்டும் என கோரினால், அவரும் யாசகரே. அவரை நமது மட்டத்திற்கு நாம் கொண்டுவர முடியாது. எதிர்மறைகளை கடந்து, வாழ்ந்தும் இறந்த நிலையில் இருந்துகொண்டு, ஆதி பரம்பொருளுடன் ஐக்கியமும் அடைந்துள்ள ஒரு குருநாதர், தனது சீடர்கள் தன்னை வழிபடுவதை அனுமதிப்பாரா? சுய-முக்கியத்துவமோ, புகழோ அல்லது விளம்பரமோ வேண்டுமென அவர் நாடிச் செல்லமாட்டார். ஒருவேளை, தகுதிவாய்ந்த குருநாதரின் இத்தகைய பண்புகளை மனதில் வைத்துக்கொள்வது, தவறான இடத்தில் சிக்கித் தவிப்பதில் இருந்து நம்மை காக்கும். பக்தர்கள் என்ற முறையில், நமது அன்பிற்கும், நாம் வணங்குவதற்கும், கவனம் செலுத்துவதற்கும் தகுதிவாய்ந்தவராக யாரை கண்டறிந்துள்ளோமோ அவருடன் ஒத்ததிர்ந்திட நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நமது சுய முயற்சிகளால் நாம் எதை அடைந்திருந்தாலும், கடவுளால் வழங்கப்பட்ட அன்பளிப்புகளுடன் ஒப்பிடுகையில், அது எப்போதும் துச்சமானதாகவே தோன்றும். பல ஆண்டுகளாக நாம் கடுந்தவமும், அர்ப்பணிப்புடன் பயிற்சியும் மேற்கொண்டிருந்தாலும்,

ஆதிபரம்பொருள் நமது இதயத்தில் முழுமையாக இறங்கவேண்டும் என கோரிக்கை வைக்க முடியாது. நமது எல்லா பயிற்சிகளும், இதயத்தை மரியாதைக்கு உரியதாக, அர்ப்பணிப்பு கொண்டதாக, சரணாகதி அடைந்ததாக தயார் செய்வதற்காகவே உள்ளது. வெற்றிடம் கொண்ட இதயத்தின் இந்த தயார் நிலையே, ஆதிபரம்பொருளை கவர்ந்திழுக்கின்றது. இறுதிகட்டம், உச்சக்கட்டநிலை என்பது தெய்வீகத்தின் இரக்கத்தாலும் கருணையாலும்தான் நிகழ்கிறது, நாம் தயாராகவும் ஆயத்தமாகவும் இருப்பதால் அல்ல. பகவத் கீதையின், அத்தியாயம் 2, ஸ்லோகம் 47, அதன் பிரசித்தி பெற்ற வரிகள் தெரிவிக்கும் விவேகத்தை இங்கு நாம் பாராட்ட முடிகின்றது.

> कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
> मा कर्मफलहेतुर्भुर्मा ते संगोऽस्त्वकर्मणि ॥
>
> உனது கடமையை செய்வதற்கு உனக்கு அதிகாரம் உள்ளது,
> ஆனால் அதன் பலன்கள் உனக்கு உரியது அல்ல.
>
> உனது செயல்களின் விளைவுகளுக்கு நீயே காரணம் என
> ஒருபோதும் எண்ணாதே, அதோடு உனது கடமையை
> செய்யாமலிருக்க ஒருபோதும் பற்றுகொள்ளாதே.

இதயபூர்வமான பிரார்த்தனைகளுடன்,

கம்லேஷ்

4 ஜூலை 2021
கான்ஹா சாந்தி வானம்

பூஜ்யஸ்ரீ சாரிஜி மகராஜ் அவர்களின்
94வது பிறந்த நாள் ஆண்டுவிழாவை முன்னிட்டு வழங்கப்பட்டது

24 ஜூலை 2021

heartfulness
advancing in love